# 19 கிறிஸ்துவின் படைவீரர் ஆவோம்

**எபேசியர் : 6 : 13-20**

கிறிஸ்தவர்களாக வாழும் எமக்கு அதற்கு எதிரான முக்கிய சவால்கள் ''தீயோன்'' இடம் இருந்து கொண்டுவரப்படுகின்றது. நாம் அறிந்தும் அறியாமலும் பல விதமான வடிவங்களிலும் பலவிதமான வழிகளிலும் தீமை எம்மை நோக்கி வருகின்றது. இவ்வாறாக தீயோன் ஏற்படுத்தும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கான முறைகளை பவுல் அடிகளார் எபேசு மக்களுக்கு எழுதிய திருமுகம் மூலமாக நாம் அறிந்து கொள்ளக்கூடியதாய் இருக்கின்றது.

யூதரல்லாத இனத்தவரிடம் நற்செய்தியைக் கொண்டு செல்வதற்காக கடவுளின் அழைப்பைப் பெற்றவர் பவுல் ஆவார். இவர் நற்செய்தியை அறிவித்தபடியால் கைது செய்யப்பட்டு சிறையில் கடுமையான பாதுகாப்போடு இருக்கும்போது எபேசியரின் திருமுகத்தை எழுதி எபேசு மக்களுக்கு அனுப்பினார். சிறைச்சாலையில் இருக்கும் போது அவர் எப்போதும் பலவிதமான போர் ஆயுதங்களைக் காணக்கூடியதாக இருந்தது. எனவே படைவீரரின் சுயவடிவத்தை அடையாளப்படுத்தி எபேசு மக்களின் ''ஆன்மீகப் போரை'' வெற்றியடையச் செய்வதற்காகவும் அதற்கு எதிராக வரும் தீமையான சக்திகளைத் தோல்வியடையச் செய்யவும் ஆயத்தம் செய்த முறையையும் ஆராய்ந்து பார்த்து இதன் மூலம் எமது ஆன்மீக வாழ்வை வெற்றியடையச் செய்வதற்கான முன் மாதிரியையும் ஆராய்ந்து பார்ப்போம்.

> **எனவே பொல்லாத நாள் வரும்போது எதிர்த்து நின்று அனைத்தின் மீதும் வெற்றிபெற்று நிலை நிற்க வல்லமை பெறும்படி கடவுள் அருளும் எல்லாப் படைகலன்களையும் எடுத்துக் கொள்ளுங்கள்.**
>
> **எபேசியர் : 6 : 13**

திருத்தூதர் பவுலைப் போன்று கிறிஸ்தவர்கள் முகம் கொடுக்க வேண்டிய போராட்டம் என்ன?

பவுல் போராயுதங்களை அடையாளப்படுத்தி, அதன் மூலம் ஆன்மீக போராட்டத் திற்காக இறைமக்களை ஆயத்தம் செய்தார். இது தீமைக்கு எதிராகச் செய்யும்

போராகும். இன்று சமுதாயத்தில் தீயசக்திகள் பலவிதமான வடிவங்களில் எம்மிடையே வருகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்கள் சிலவற்றை அறிந்து கொள்வோம்.

- சில நண்பர்கள் மூலமாக வரும் தவறான தூண்டுதல்.
- நவீன தொடர்பு சாதனங்களை தவறாக பயன்படுத்துதல்.
- போதை பொருள்கள், புகைபிடித்தல் போன்றவற்றை தூண்டுதல்.
- ஆசிரியர், பெற்றோர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதில் நாட்டமின்மை.
- பொது தீர்மானங்களுக்கு தலைசாய்ப்பதற்கு காண்பிக்கும் நாட்டமின்மை.

**வாசிப்போம்**
**எபேசியர் : 6 : 14 -17**

மேலேயுள்ள திருவிவிலியப் பகுதியின் மூலமாக இறைமக்களின் போர் ஆயுதங்களைப் பெயரிடுக.



கிறிஸ்தவர்களாகிய எமது போர் ஆயுதங்கள்

உண்மை என்னும் → இடைக் கச்சை

போர் நிகழும்போது உடலை சரியாக வைத்துக்கொள்வதற்கு இடைக்கச்சை பயன்படுத்துகின்றது. கிறிஸ்தவர்களுக்கு ஏற்படும் ஆன்மீகப் போராட்டத்தில் உண் மையை விட்டுவிலகாமல் இருக்க வேண்டுமென்பதை இது வெளிப்படுத்துகின்றது. மெய்யான உண்மையை எமக்கு விளக்கித்தரும் இறைவார்த்தையாகும்.

- பொல்லாத செயல்களை அகற்றிவிடுவதும் அதை இல்லாது செய்வதில் பங்கேற்றல்.

- தூய ஆவியானவர், மனதில் பேசுவதைக் கேட்டு உண்மையுள்ளவர்களாக செயற்படுவது அவசியமாகும்.

நீதி என்னும் → மார்புக்கவசம்

படைவீரர்களின் முக்கியமான வாழ்வைப் பாதுகாக்கும் அணிகலனான மார்புக்கவசம். இது அவர்களின் மார்பை ஏதாவது ஆயுதங்கள் தாக்கிச் செல்லா வண்ணம் தடுப்பதாகும். எமது வாழ்வும் தீமையால் அழிந்து போகாமல் இருப்பதற்கு, எமது வாழ்வில் எப்போதும் நீதியை நிலைநாட்டுவது அவசியமாகும்.

- தீமைக்கு எதிராகப் போராட வேண்டும்
- எனவே எமது வாழ்வு நீதியால் நிரம்பி இருப்பதற்கு முயற்சி செய்வோம்.
- நீதியினூடாக இறையரசிற்குச் செல்லும் உரிமை கிடைக்கின்றது.
- நீதியின் வழியில் செல்வோருக்கு அநேக தடைகள் ஏற்பட்டாலும் இறுதியில் அவர் தனது வாழ்வை வெற்றியடையச் செய்யலாம்.

அமைதி அருளும் நற்செய்தி என்னும் → மிதியடி

நற்செய்தியை உலகம் அனைத்தும் எடுத்துச் செல்லவேண்டியது கிறிஸ்தவர்களாகிய எமது பொறுப்பாகும் மிதியடியை போட்டுக் கொள்ளுதல் என்பதன் அர்த்தமானது பயணம் செல்லுதல் ஆகும். அமைதி அருளும் நற்செய்தியை உலகம் முழுவதும் கொண்டு செல்லும் முறைகள் பலவற்றை ஆராய்ந்து பார்ப்போம்.

- இயேசுவின் பிறப்பின் மூலமாக உலகிற்கு அமைதி உதயமான முறையை வெளிப்படுத்துவோம்.
- நற்செய்தியை உலகிற்கு பறைசாற்றுவது கிறிஸ்தவர்களான எமது பொறுப்பு என்பதை உணர்ந்து செயல்படுவோம்.
- எம் வாழ்க்கை முன்மாதிரி நற்செய்தியைப் பிறரிடம் கொண்டு செல்வதற்கு தகுதியானவழி எது என்பதனை சிந்தித்து வாழ்வோம்.

நம்பிக்கை என்னும் → கேடயம்

கேடயத்தைப் பிடித்துக்கொள்வது தீயோனிடமிருந்து வரும் தீமைகளைத் தடுப்பதற் காகும். கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் மூலமாக எம்மிடையே வரும் சோதனைகளில் இருந்து வெற்றி பெறமுடியும்.
இதனால்,

- எல்லா வேளைகளிலும் எம்மிடமுள்ள நம்பிக்கை என்னும் கேடயத்தை வைத்திருப்பது அவசியமாகும்.

- எமது வாழ்வின் இறுதிவேளை வரை இறை நம்பிக்கையோடு செயற்படுவது அவசியமாகும்.

- பலவிதமான தடைகள், சவால்கள் மத்தியில் எம்மிடையே காணப்படும் நம்பிக்கையைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இடைவிடாமல் முயற்சி செய்ய வேண்டும்.

மீட்பு என்னும் ⟶ தலைச்சீரா

படைவீரர்கள் தலைச்சீராவை அணிந்து கொள்வது புத்தியோடும் சுயசிந்தையோடும் தனது பொறுப்பை நிறைவு செய்வதற்கும் தமது தலையைப் பாதுகாத்துக் கொள் வதற்கும் இதை அணிவர். கிறிஸ்தவர்களான எமக்கு இதை இவ்வாறு பொருத்தமாக்கிக் கொள்ள முடியும்.

- தலையானது உடலின் முக்கியமான அவயவமாகும். இதைப்போன்று கிறிஸ்தவ வாழ்வின் முக்கிய குறிக்கோளானது பாவத்திலிருந்து மீட்பு.
- தலைச்சீராவால் தலையைப் பாதுகாப்பது போன்று கிறிஸ்தவ வாழ்வைப் பாதுகாப்பது பாவத்தில் இருந்து மீட்படைவதன் மூலமேயாகும்.
- நாம் எமது வாழ்வைப்போன்று பிறரின் வாழ்வையும் பாவத்தில் இருந்து மீட்பதற்கு முயற்சி செய்வது எமது பொறுப்பாகும்.

தூயஆவி அருளும் கடவுளின் வார்த்தை என்னும் ⟶ வாள்

பகைவரிடம் இருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கும் பகைவரை அழிப்பதற்கும் வாள் பயன்படுத்தப்படுகின்றது. இதனைப் போன்று எமது கிறிஸ்தவ வாழ்வினை நடாத்திச் செல்வதற்கும் பகைவரை அழிப்பதற்கும் பயன்படுத்த வேண்டியது இறை வார்த்தையாகும்.

- இறைவார்த்தை என்னும் கூர்மையான வாளினால் எமது வாழ்வில் காணப் படும் தீமையான செயல்களை அகற்றி விடுவதற்கு வழி காட்டுகின்றது.

- பகைவரைத் தோல்வியடையச் செய்வதற்கு வாள் பயன்படுத்தப்படுவது போல எமது வாழ்வில் வரும் தீமையைத் தோல்வியடையச் செய்ய இறை வார்த்தையைப் பயன்படுத்துவோம்.

- இயேசுவைப் போன்று சோதனைகளின் மத்தியில் இறை வார்த்தையைப் பயன்படுத்தி பாவத்திலிருந்து விலகியிருப்பதற்கு முயற்சி எடுப்போம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி கவச ஆயுதங்களை அணிந்து கொண்ட கிறிஸ்தவன் இயேசுவின் படைவீரன் ஆகிறான். இங்கு கிறிஸ்தவர்கள் மூலமாக நிகழக்கூடியது தீமைக்கு எதிராகச்செய்யும் போராகும். அவ்வாறான படைவீரனிடம் இருக்கவேண்டிய முக்கியமான பண்பாக இருப்பது ஜெபித்தல் ஆகும். இது எபிரேயர் 6:18-20 வரை இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக படைவீரரிடம் இருக்க வேண்டிய மன்றாட்டைப் பற்றி எபிரேயருக்கு வழங்கப்பட்ட அறிவுரை

- முழு மனதோடு மன்றாடுதல்
- தூய ஆவியின் வல்லமையினால் நம்பிக்கை கொண்டு மன்றாடுதல்
- விழிப்பாயிருந்து இடைவிடாமல் மன்றாடுதல்
- இறை மக்களுக்காக மன்றாடுதல்
- இறைபணியில் ஈடுபடுவோருக்காக மன்றாடுதல்

இயேசுவுக்காக சிறையில் இருந்தபோது பவுல் அடிகளார் இடைவிடாமல் எல்லா இடங்களிலும் இயேசுவுக்காக அவரின் தூதுவனாக நியமிக்கப்பட்டவராக நம்பிக்கை கொண்டவராக தன் பணியின் போராட்டத்தில் இயேசுவுக்கு ஏற்ற படைவீரனாக செயற்பட்டார்.

இவ்வாறு பயமற்ற போர்வீரராக இறைமக்களின் போர் ஆயுதங்களை தரித்துக் கொண்டு தீமையின் சக்திக்கு எதிராக போராடிக் கிறிஸ்துவின் தூதுவராக செயற்படுவதற்கு அவர் எங்களையும் அழைக்கின்றார்.

### செயற்பாடு

1. கிறிஸ்தவன் எதற்கு எதிராக போர்புரிய வேண்டும்?
2. கிறிஸ்துவின் படையில் போர்வீரனாக இறைபணியில் நீர் ஈடுபடும் முறையை விளக்குக.